# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 53/மா/2025
நாள்: **02.03.2026**

B. பாஸ்கர்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–6
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்கள்

(2) உரிமையாளர்,
ஸ்ரீதனலட்சுமி பிளைவுட்,
சென்னை–12

சென்னை–600 112, சூளை, காட்டூர் நல்லமுத்து தெரு, கதவு எண் 11/5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. பாஸ்கர் என்பவரின் 07.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.10.2024 அன்று பெறப்பட்டு 53/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 112, சூளை, காட்டூர் நல்லமுத்து தெரு, கதவு எண் 11/5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. பாஸ்கர் என்பவர் தனது 07.10.2024 நாளிட்ட படிவம் 1–ன் தொடர்ச்சியாக 04.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"சென்னை–600 012, பட்டாளம், டிம்லெஸ் ரோடு, நெ.181 என்ற முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனம் அரசு எதிராகவும், சென்னை மாநகராட்சி, மற்றும் தீயணைப்புத் துறையில் எந்த ஒரு உரிமம் பெறாமல் செயல்படுகிறது என்று தெரிய வந்தது. இதன் தொடர்ச்சியாக கடந்த 16.07.2024ம் தேதியன்று பாரத் இந்து முன்னணி வடசென்னை மாவட்ட தலைவர் B. பாஸ்கர் எனது தலைமை அலுவலகம், சென்னை–600 012, சூளை, காட்டூர் நல்லமுத்து தெரு, நெ.11/5 என்ற முகவரியில் இருந்து சென்னை–12, பட்டாளம், ஸ்டாரான்ஸ் சாலை, நெ.58 சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் மண்டல அலுவலர் அவர்களுக்கு இந்தியன் அஞ்சல் துறை குறியீடு எண் ET076386496IN எண்ணின்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்படி 6(1) கீழ் தகவலை கேட்டு தபாலை பெற்றுக் கொண்டு தனக்கு நாள் 18.07.2024ம் தேதி தபால் அலுவலகத்தில் இருந்து ரசீதும் பெற்றேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்படி 6(1) கீழ் கேட்ட கேள்விக்கு சென்னை மாநகராட்சி வருவாய் அலுவலர் அவர்களும் மற்றும் சென்னை மாநகராட்சி மண்டலம் அலுவலரும் உரிய விளக்கம் அளிக்காத பட்சத்தில் மீண்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் உட்பிரிவு 19(1)–ன் படி முதல் மேல்முறையீடு மனு சென்னை–600 012, பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் சாலை, எண் 58 என்ற முகவரியில் உள்ள சென்னை மாநகராட்சி, மண்டலம்–6 அலுவலகத்தில் மண்டல அலுவலர் அவர்களுக்கு இந்தியன் அஞ்சல் துறை குறியீடு எண் ET0763638178IN எண்ணின்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்படி உட்பிரிவு 19(1) கீழ் தகவல் கேட்டு இருந்தோம். ஆனால் சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ல் இருந்து 40 நாள் கடந்தும் தகவல் அளிக்கவில்லை.

இதன் தொடர்ச்சியாக 40 நாள் கழித்து மீண்டும் சென்னை மாநகராட்சி, மண்டலம் 6 அலுவலகத்திற்கு சென்று நேரடியாக தகவல் கேட்ட போது சென்னை மாநகராட்சி 77 வார்டு வருவாய் துறையில் அலுவலர் யாரும் பணி புரியவில்லை என்று தகவல் கூறியுள்ளார். தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் தகவல் தருவதற்கு 30 நாளில் தகவல் அளிக்கவில்லை. எதிர்மனுதாரருக்கு உறுதுணையாக செயல்பட்டு வருவதைக் கண்டித்து வந்தோம்.

சென்னை மாநகராட்சி மண்டலம் 6 அலுவலகத்திற்கு சென்று கண்டித்தும் முறையாக பதிவு செய்யாமல் 10/2024ம் தேதியன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்ட போது, சென்னை மாநகராட்சி வரிசை எண் ம.அ.6வது. ந.க. எண் ஆர்.2/1907/2024–ன்படி தனது மனு சம்பந்தப்பட்ட கடிதம் எனது முகவரியில் கிடைத்தது. அதில் சென்னை–600 012, பட்டாளம், டிரம்ஸ் ரோடு, நெ.181 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனத்தில் கள ஆய்வில் தொழில் உரிமம் இன்றி செயல்படுவது கண்டயறிப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023–ன்படி தாங்களுக்கு வழங்கப்பட்டது என்றும், தீயணைப்பு துறையின் சான்று பெறப்பட்ட வில்லை என்றும், கள ஆய்வில் Plywoods ஒட்ட Fervicol பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது என்றும்,

தீயணைப்பு துறையின் சான்று பெற்ற தீ தடுப்பான்கள் அமையப் பெற்றிருப்பின் தொழில்கள் உரிமம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தகவல் கிடைத்தது. உதவி வருவாய் அலுவலர் மூலமாக, அதே போல் சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ல், மூலமாக எதனால் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் நிறுவனத்தின் மீது எதனால் சட்டப்படி STOP NOTICE வழங்கப்படவில்லை என்று உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்று கடந்த 14.11.2024 தேதியன்று எனது தலைமையிலான சட்ட அறிவிப்பு நோட்டீஸ் மூலமாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று இந்திய அஞ்சல் துறை மூலமாக சென்னை மாநகராட்சி மண்டலம் 6 மண்டல அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அவர்களுக்கு அனுப்பி இருந்தேன்.

இந்த சட்ட அறிவிப்பு கிடைத்த 7 நாட்களுக்குள் விளக்கம் அளிக்காத பட்சத்தில் ஊழியர்கள் சட்டம், 1948, 1949 படியும் நடவடிக்கை மேற்கொள்ளவும், சாட்சியம் சட்டத்திற்கு கீழ் தங்கள் பணியில் சரிவகை செய்யவில்லை என்றும், தனது தவறை ஒப்புக் கொண்டதாக கருதப்படும் என்று சட்ட அறிவிப்பு நோட்டீஸ் மூலமாக தெரிவித்து இருந்தோம். ஆகையால் தங்கள் விளக்கம் அளிக்காத பட்சத்தில் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் அனைவரும் தனது தவறை ஒப்புக் கொண்டதாக கருதப்படுகிறது. மேலே எதிர்த் தரப்பினர் குறிப்பாக சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் அலுவலர் சட்டத்திற்கு புறம்பான வகையில் தனலட்சுமி பிளைவுட் நிறுவனத்திற்கு உறுதுணையாக செயல்பட்டு வருவதை உறுதிபடுத்தி 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சட்டம் பிரிவு 3 கீழ் அரசு அதிகாரிகள் மீது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இன் 205 வது பிரிவு வருவாய் அலுவலர் பதவி மற்றும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல், மனுதாரரை வேண்டுமென்று மன உளைச்சலை உண்டாக்கும் வகையில் செயல்படுதல், தன்

அதிகாரத்தை வைத்துக் கொண்டு தவறான நோக்கத்தில் பணம் சம்பாதிக்கும் வகையில் ஈடுபடுதல் செய்தால் தமிழ்நாடு உள்ளாட்சி நடுவர் மன்றம் ரீதியாக கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்களது விளக்கமாகும். எனவே, தங்கள் மன்றத்திலிருந்து அரசு அதிகாரிகள் மீது சட்ட ரீதியாக எனது மனு மீது உரிய விசாரணை செய்து தவறு செய்த அரசு அதிகாரிகள் மீது நிரந்தர பணி நீக்கம் அல்லது கடும் நடவடிக்கை மேற்கொள்ள தங்கள் மன்றத்தின் ரீதியாக நீதி கிடைக்கும் என்று நாங்கள் எண்ணுகிறோம். எனவே அய்யா அவர்களை உரிய விசாரணை செய்தும் அரசு அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள மிக மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 28.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் 06.01.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

''பாரத் இந்து முன்னணியை சேர்ந்த திரு. B. பாஸ்கர் என்பவர் 16.07.2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவில் வார்டு 77 கதவு எண் 181, டிமலர்ஸ் சாலை, பட்டாளம், சென்னை–600 012ல் உள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற தொழிலகம் குறித்து தகவல்கள் கோரி மனு சமர்ப்பித்திருந்தார்.

மனுதாரர் மனுவினை தொடர்ந்து வார்டு உரிமம் ஆய்வாளரால் தொழில் நடத்தும் இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் தொழில் உரிமம் இன்றி தொழில் இயங்கி வருவது கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 102–ன் கீழ் 24.09.2024 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது.

இதற்கிடையே மனுதாரருக்கு 01.10.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகளின் படியான தாக்கீதை பெற்றுக் கொண்ட மேற்கண்ட கடையின் உரிமையாளர்கள் மேற்கண்ட கடையின் 31.03.2019 வரைக்கான பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்பட்ட தொழில் உரிம நகலை சமர்ப்பித்து, தொழில் உரிமம் தொடர்ந்து புதுப்பிக்காததால் தொழில் உரிமம் புதிதாக வேண்டி 03.12.2024–ல் மனு சமர்ப்பித்தனர்.

மனுதாரர் தொழில் உரிமம் வேண்டி தொழில் உரிம விண்ணப்பம் சமர்ப்பித்ததால், மனுதாரரின் தொழில் உரிம மனுவை பரிசீலனை செய்யும் பொருட்டு மாவட்ட தீயணைப்பு அலுவலரின் அறிக்கை கோரி 04.12.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. மாவட்ட தீயணைப்பு அலுவலர் 19.12.2024 நாளிட்ட தீயணைப்பு சான்று வழங்கியுள்ளார். இந்த சான்று 19.12.2024 முதல் ஓர் ஆண்டுக்கு செல்லத்தக்கது.

தொழில் உரிம கட்டணம் ரூ 6000/-த்தை செலுத்த கோரி நேரடியாக மனுதாரரை அணுகி உரிமம் ஆய்வாளரால் அறிவுறுத்தப்பட்டும் தொழில் உரிம கட்டணம் செலுத்தப்படவில்லை. இதனால் மனுதாரருக்கு தொழில் உரிமம் வழங்க இயலவில்லை. ஆனால் கடையின் உரிமையாளர்கள் இரண்டாம் அரையாண்டு 2024-2025 வரை இணையவழி மூலமாக தொழில் வரி செலுத்தியுள்ளனர்.

இந்நேர்வில் கடையின் உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து உரிய தொழில் உரிமம் இன்றி கடையை நடத்தி வருவதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகளின்படி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என பணிந்து தெரிவிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை–600 012, பட்டாளம், டிம்லெஸ் ரோடு, நெ.181 என்ற முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனம் சென்னை மாநகராட்சி, மற்றும் தீயணைப்புத் துறையில் எந்த ஒரு உரிமம் பெறாமல் செயல்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்படி 6(1) கீழ் கேட்ட கேள்விக்கு சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ல் இருந்து 40 நாள் கடந்தும் தகவல் அளிக்கவில்லை.

2024 அக்டோபர் மாதம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்ட போது, சென்னை–600 012, பட்டாளம், டிம்லெஸ் ரோடு, நெ.181 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனம் தொழில் உரிமம் இன்றி செயல்படுவது கண்டயறிப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023–ன்படி தாக்கீது வழங்கப்பட்டது என்றும் மேலும், தீயணைப்பு துறையின் சான்று பெறப்படவில்லை மற்றும் Plywoods ஒட்ட Fervicol பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி கடித எண்.ம.அ6வது ந.க.எண்.ஆர்–2/1907/2024 கடிதத்தில் தெரிவித்து எங்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் உரிமயின்றி செயல்படும் மேற்கண்ட நிறுவனத்திற்கு இதுவரை சட்டப்படி Stop Notice வழங்கப்படவில்லை.

எனவே, உரிமம் இல்லாமல் இயங்கும் கடை உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்."

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரரின் புகார் மனு தொடர்பாக வார்டு உரிமம் ஆய்வாளரால் தொழில் நடத்தும் இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் தொழில் உரிமம் இன்றி தொழில் இயங்கி வருவது கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 102–ன் கீழ் 24.09.2024 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது. இத்தகவல் மனுதாராருக்கு தெரிவிக்கப்பட்டது. தாக்கீதை பெற்றுக்கொண்ட ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் கடையின் உரிமையாளர் 31.03.2019 வரைக்கான பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட உரிம நகலை சமர்ப்பித்து, உரிமம் புதுப்பிக்காததால், தொழில் உரிமம் வேண்டி 03.12.2024–ல் மனு அளித்தார். கடை உரிமையாளரின் உரிம மனுவை பரிசீலனை செய்யும் பொருட்டு மாவட்ட தீயணைப்பு அலுவலரின் அறிக்கை கோரி 04.12.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. மாவட்ட தீயணைப்பு அலுவலர் முதல் ஓர் ஆண்டுக்கு செல்லதக்க வகையில் 19.12.2024 நாளிட்ட தீயணைப்பு சான்று வழங்கியுள்ளார்.

தொழில் உரிம கட்டணம் ரூ 6000/-த்தை செலுத்த கோரியும், உரிமம் ஆய்வாளரால் அறிவுறுத்தப்பட்டும், கடை உரிமையாளர் தொழில் உரிம கட்டணத்தை செலுத்தவில்லை. இதன் காரணமாக தொழில் உரிமம் வழங்கப்படவில்லை. ஆனால் கடையின் உரிமையாளர்கள் இரண்டாம் அரையாண்டு 2024-2025 வரை இணையவழி மூலமாக தொழில் வரி செலுத்தியுள்ளார்.

கடை உரிமையாளர் தொழில் உரிமம் இன்றி கடை நடத்தி வருவதால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகளின்படி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998–ன்படி உரிய சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

7. இரண்டாம் எதிர்மனுதாரர் 07.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாததால், மேற்கண்ட மனுதாரர் மனு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.01.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் மண்டல அலுவலர் மற்றும் மனுதாரருக்கு நகலிடப்பட்டது.

8. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் நாளிடாத அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

''பாரத் இந்து முன்னணியை சேர்ந்த திரு. B. பாஸ்கர் என்பவர் 16.07.2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவில் வார்டு 77 கதவு எண் 181, டிமலர்ஸ் சாலை, பட்டாளம், சென்னை–600 012ல் உள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற தொழிலகம் குறித்து தகவல்கள் கோரி மனு சமர்ப்பித்திருந்தார்.

மனுதாரர் மனுவினை தொடர்ந்து வார்டு உரிமம் ஆய்வாளரால் தொழில் நடத்தும் இடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் தொழில் உரிமம் இன்றி தொழில் இயங்கி வருவது கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 102–ன் கீழ் 24.09.2024 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது.

இதற்கிடையே மனுதாராருக்கு 01.10.2024 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகளின் படியான தாக்கீதை பெற்றுக் கொண்ட மேற்கண்ட கடையின் உரிமையாளர்கள் மேற்கண்ட கடையின் 31.03.2019 வரைக்கான பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்பட்ட தொழில் உரிம நகலை சமர்ப்பித்து, தொழில் உரிமம் புதுப்பிக்காததால் தொழில் உரிமம் புதிதாக வேண்டி 03.12.2024–ல் மனு சமர்ப்பித்தனர்.

மனுதாரர் தொழில் உரிமம் வேண்டி தொழில் உரிம விண்ணப்பம் சமர்ப்பித்ததால், மனுதாரரின் தொழில் உரிம மனுவை பரிசீலனை செய்யும் பொருட்டு மாவட்ட தீயணைப்பு அலுவலரின் அறிக்கை கோரி 04.12.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. மாவட்ட தீயணைப்பு அலுவலர் 19.12.2024 நாளிட்ட தீயணைப்பு சான்று வழங்கியுள்ளார். இந்த சான்று 19.12.2024 முதல் ஓர் ஆண்டுக்கு செல்லத்தக்கது.

தொழில் உரிம கட்டணம் ரூ 6000/-த்தை செலுத்த கோரி நேரடியாக மனுதாரரை அணுகி உரிமம் ஆய்வாளரால் அறிவுறுத்தப்பட்டும் தொழில் உரிம கட்டணம் செலுத்தப்படவில்லை. இதனால் மனுதாரருக்கு தொழில் உரிமம் வழங்க இயலவில்லை. ஆனால் கடையின் உரிமையாளர்கள் இரண்டாம் அரையாண்டு 2024-2025 வரை இணையவழி மூலமாக தொழில் வரி செலுத்தியுள்ளனர். முதல் அரையாண்டு 2025–2026 மற்றும் இரண்டாம் அரையாண்டு 2025–2026க்கான தொழில் வரி இன்னும் செலுத்தவில்லை. தீயணைப்பு துறையின் சான்று பெற்று சமர்ப்பிக்கவில்லை.

இந்நேர்வில் கடையின் உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து உரிய தொழில் உரிமம் இன்றி கடையை நடத்தி வருவதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 விதி 289(9)ன்படி தொழில் உரிம

விண்ணப்பத்தை நிராகரித்து 21.01.2026 அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது என பணிந்து தெரிவிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

9. மனுதாரர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''நான் ஏற்கனவே 07.01.2026 நடைபெற்ற விசாரணையில் தெரிவித்த ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனத்தின் மாடியில் குடியிருப்புகளும் மற்றும் நிறுவனத்தை சுற்றி வீடுகள் இருப்பதால் அந்நிறுவனம் தீயணைப்புத்துறையிடமிருந்து உரிமம் பெறாமல் இயங்குவதால், தீ விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அந்நிறுவனத்தை மூடிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

10. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''நாங்கள் 07.01.2026 அன்று வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மனுதாரர் தொழில் உரிமம் கட்டணம் ரூ 6,000/–ஐ செலுத்த கோரியும், செலுத்தாததாலும், தீயணைப்பு துறையின் சான்று சமர்ப்பிக்காததாலும், கடையின் உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிடமிருந்து உரிய தொழில் உரிமம் இன்றி கடையை நடத்தி வருவதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள், 2023 விதி 289–ன்படி தொழில் உரிமம் விண்ணப்பத்தை நிராகரித்து ஆணை வெளியிடப்பட்டது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதன் நகலினை இம்முறை நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறோம்.''

11. இரண்டாம் எதிர்மனுதாரான ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் நிறுவனம் சார்பாக திரு.சி. பிரபு என்பவர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை 112, பட்டாளம், டிமெலஸ் ரோடு, கதவு எண் 181ல் எனது மனைவியின் பெயரில் ஸ்ரீ தனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். எனது நிறுவனத்தின் உரிமம் புதிப்பிக்கப்படாததால், தொழில் உரிமம் வேண்டி 03.12.2024ல் மனு அளித்தேன். தொழில் உரிமம் கட்டணம் செலுத்த பெருநகர சென்னை மாநகராட்சியால் எனக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

எனவே, தொழில் உரிமம் கட்டணம் தெரிவிக்கும் பட்சத்தில் அத்தொகையினை செலுத்த தயாராக உள்ளேன் என்றும், மற்றும் இதர சான்றுகளை பெற காலஅவகாசம் அளிக்குமாறும், அதுவரை எனது நிறுவனத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

12. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள், முதலாம் எதிர்மனுதாரர் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் அறிக்கைகள், முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள், இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் நிறுவனம் சார்பாக திரு.சி. பிரபு என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–600 012, பட்டாளம், டிம்லெஸ் ரோடு, நெ.181 என்ற முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் என்ற நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தீயணைப்புத் துறையிடமிருந்து உரிமம் பெறாமல் செயல்படுகிறது என்பதும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் கோரிய போது, அந்நிறுவனம் தொழில் உரிமம் இன்றி செயல்படுவது கண்டயறிப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள், 2023–ன்படி தாக்கீது வழங்கப்பட்டதாகவும், தீயணைப்பு துறையின் சான்று பெறப்படவில்லை என்றும், மேலும் உரிமம் இன்றி செயல்படும் மேற்கண்ட நிறுவனத்திற்கு இதுவரை சட்டப்படி Stop Notice வழங்கப்படவில்லை என்ற தகவல் அளிக்கப்பட்டது என்பதும், உரிமம் இல்லாமல் இயங்கும் கடை உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் நிறுவனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் வார்டு உரிமம் ஆய்வாளரால் கள ஆய்வு செய்யப்பட்டதில், தொழில் உரிமம் இன்றி தொழில் இயங்கி வருவது கண்டறியப்பட்டு, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், விதி 102–ன் கீழ் 24.09.2024 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், தாக்கீதை பெற்றுக்கொண்ட ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் கடையின் உரிமையாளர், 31.03.2019 வரை பெறப்பட்ட தொழில் உரிமத்தை புதுப்பிக்காமல், புதுப்பிக்க வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட மனு பரிசீலனை செய்யும் பொருட்டு மாவட்ட தீயணைப்பு அலுவலரின் அறிக்கை கோரியதன் அடிப்படையில், மாவட்ட தீயணைப்பு அலுவலர் முதல் ஓர் ஆண்டுக்கு செல்லதக்க வகையில் தீயணைப்பு சான்று வழங்கியுள்ளார் என்பதும், மேற்கண்ட கடையின் உரிமையாளரை தொழில் உரிமம் கட்டணமாக ரூ 6,000/–ஐ செலுத்தக் கோரியும், அவர் செலுத்தாதலும், மற்றும் தீயணைப்பு துறையின் சான்று சமர்ப்பிக்காமல் அந்நிறுவனம் இயங்கி வருவதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி 289–ன்படி தொழில் உரிமம் விண்ணப்பத்தை நிராகரித்து ஆணை வெளியிடப்பட்டது என்பதும், முதலாம் எதிர்மனுதாரர் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6–ன் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

சென்னை, பட்டாளம், டிமெலஸ் ரோடு, கதவு எண் 181–ல் தனது மனைவியின் பெயரில் இயங்கி வரும் ஸ்ரீ தனலட்சுமி பிளைவுட் நிறுவனத்தின் தொழில் உரிமம் புதிப்பிக்கப்படாததால், தொழில் உரிமம் வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்த மனுவிற்கு, தொழில் உரிமம் கட்டணம் செலுத்த தனக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்பதும், தொழில் உரிமம் கட்டணம் தெரிவிக்கும் பட்சத்தில் அத்தொகையினை செலுத்த தயாராக உள்ளதாகவும் மற்றும் இதர சான்றுகளை பெற காலஅவகாசம் அளிக்குமாறும், அதுவரை தனது நிறுவனத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் என்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்குமாறு கோரியிருப்பது இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் புகார் மனு தொடர்பாக, சென்னை–600 012, பட்டாளம், டிமெலஸ் ரோடு, நெ.181 என்ற முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் கடையின் உரிமையாளர் 31.03.2019 பிறகு தொழில் உரிமம் பெறாமல் கடையை நடத்தி வருவதாலும், தொழில் உரிம கட்டணமாக ரூ 6,000/–ஐ செலுத்தக் கோரியும், அவர் செலுத்தாதலும் மற்றும் தீயணைப்பு துறையின் சான்று சமர்ப்பிக்காததாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன் விதிகளின்படி தாக்கீது வழங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகர்ப்புற

உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி 289–ன்படி தொழில் உரிமம் விண்ணப்பத்தை நிராகரித்து பெருநகர சென்னை மாநகராட்சியால் 20.01.2026 நாளிட்ட ஆணை வெளியிடப்பட்ட நிலையில், மேற்படி நிறுவனத்தின் மீது உரிய விதிகளின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. B. பாஸ்கர்,
கதவு எண் 11/5,
காட்டூர் நல்லமுத்து தெரு,
சூளை, சென்னை–600 112.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 6,
பெருநகர சென்னை மாநகராட்சி,
158, ஸ்டாரஹன்ஸ் சாலை,
பட்டாளம்,
சென்னை–600 012.

(4) திரு. சி. பிரபு,
கதவு எண் 181,
ஸ்ரீதனலட்சுமி பிளைவுட் நிறுவனம்,
டிமெலஸ் ரோடு,
பட்டாளம்,
சென்னை–600 012.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

3/3/26
செயலாளர்
3.3.26